

### ஒருங்கிணைந்த அரசாங்க முயற்சிகள்

# 13ஆவது மலேசியத் திட்டத்தின் வெற்றிக்கு வித்திடும்

## – பிரதமர்



கோலாலம்பூர், ஜூன் 25-

ஒவ்வோர் அமைச்சும் அவற்றின் கீழ் செயல்படும் ஏஜென்சிகளும் முறையான ஒருங்கிணைப்பை சிறப்பான முறையில் அமல்படுத்தினால் 13ஆவது மலேசியத் திட்டத்தில் வெற்றி உறுதி என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

13ஆவது மலேசியத் திட்டம் அமல்படுத்தப்படும்போது அரசாங்கத்தின் ஒவ்வோர் அமைச்சும் அதன் கீழ் செயல்படும் ஏஜென்சிகளும் தங்களது திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படுவதற்குத் தயாராக இருப்பதன் வழி அதன் வெற்றி உறுதி செய்யப்படும் என்று நிதி அமைச்சருமான அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு நிர்வாகக் கேந்திரமும் ஒருங்கிணைந்த உணர்வோடு முன்செல்ல வேண்டும். எதிர்காலத் தேவைகளைச் சமாளிப்பதற்கும் கொள்கைகள் வெற்றிகரமாக அமல்படுத் தப்படுவதற்கும் ஒரு தேசியக் குழுவாக ஒன்றிணைந்து அனைத்துத் தரப்பினரும் முன்னேறி நகர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பல்வேறு அமைச்சுகள், மத்திய அரசாங்க ஏஜென்சிகள், மாநில அரசாங்கங்கள் ஆகிய தரப்புகளுடன் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து நடத்தப்பட்ட பல்வேறு விவாதங்கள், சந்திப்புகள் ஆகியவற்றைத் தொடர்ந்து 13ஆவது மலேசியத் திட்டம் வரையப் பட்டிருக்கிறது என்று நேற்று முன்தினம் 13ஆவது மலேசியத் திட்டத்தின் முக்கியத் திட்டங்கள், கட்டமைப்புகள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்வதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமையேற்ற பின்னர் டத்தோஸ்ரீ அன்வார் தெரிவித்தார்.

13ஆவது மலேசியத் திட்ட வரைவு மிக முக்கிய மான ஓர் ஆவணமாகும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு நாட்டின் மேம்பாடுகளின் இலக்குகளை வடிவமைக்கும் ஆற்றலை அது கொண்டிருக்கிறது. அடுத்த மாத இறுதியில் நடைபெறும் நாடாளுமன்ற மக்களவைக் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப் படுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது என்று பிரதமர் கூறினார்.

இந்தக் கூட்டத் தில் அனைத்து அமைச்சர்கள், உயர்நிலை அமைச்சு நிர்வாகங்கள் ஆகிய தரப்பினர் புதிய சிந்தனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைப்பதற்கு அன்வார் வாய்ப்பு வழங்கினார். 13ஆவது மலேசியத் திட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன்னதாக ஆக்கப்பூர்வமான மாற்றங்களை இணைக்கும் முயற்சிக்கு இந்தப் புதிய சிந்தனைகளும் பரிந்துரைகளும் உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

மடானி அரசாங்கம் கடந்த ஈராண்டுகளாக மேற்கொண்டிருக்கும் சீரமைப்புகளின் தொடர்ச்சிதான் இந்த 13ஆவது மலேசியத் திட்டம். மடானி பொருளாதாரத்தின் விருப்பங்களின் அடிப்படையில் பொருளாதார கட்டமைப்பு மறு சீரமைப்பைக் காணும். இனங்கள் வேறுபாடின்றி சமச்சீராக அனைத்து மக்களின் நல்வாழ்வுக்கு கௌரவமிக்க திட்டங்களை 13ஆவது மலேசியத் திட்டம் கொண்டிருக்கிறது.

இதன்வழி ஒரு வலிமைமிக்க மலேசியாவை உருவாக்குவதற்கு மடானி அரசாங்கம் இலக்கு கொண்டுள்ளது என்று டத்தோஸ்ரீ அன்வார் கூறினார். 13ஆவது மலேசியத் திட்டத்தின் கீழ் அனைத்து இனங்களும் மக்களும் நல்வாழ்க்கையைப் பெறுவது உறுதி செய்யப்படும். அதற்கான திட்டங்கள் மிகச் சரியாக வடிவமைக்கப்பட்டு அமல்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.


